23

**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலன் - 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் விற்பனைக் குழுவில் கூடுதலாக அன்னூர் மற்றும் தொண்டாமுத்தூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை கொப்பரை கொள்முதல் நிலையங்களாக நியமித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

அரசாணை (2டி) எண்.130

நாள்: 04.08.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053,
சுபகிருது-ஆடி 19-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.21, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 21.01.2022.
2. அரசாணை (2டி) எண்.04, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 25.01.2022.
3. அரசாணை (2டி) எண்.50, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 12.04.2022.
4. அரசாணை (2டி) எண்.111, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க2) துறை, நாள் 23.06.2022,
5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்வணிகத் துறை இயக்குநரின் கடித எண்.விகுதி3/002346/2022, நாள்.08.07.2022.

*******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலையின் கீழ் ஜனவரி முதல் ஜூன் 2022 வரை கொப்பரை கொள்முதல் செய்வதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன்படி தமிழக அரசிதழ் எண்.60, நாள் 24.01.2022-ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022ம் ஆண்டிற்கான 50,000 மெ.டன் அரவைக் கொப்பரை மற்றும் 1000 மெ.டன் பந்து கொப்பரை கொள்முதல் செய்வதற்கு மாநில அளவிலான ஆதரவாளராக தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தையும், முதன்மை கொள்முதல் முகமைகளாக 21 விற்பனைக் குழுக்களையும் மற்றும் கொள்முதல் நிலையங்களாக 42 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா]

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கு நெகமம் மற்றும் செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுடன் மேலும் கூடுதலாக பொள்ளாச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை கொப்பரை கொள்முதல் நிலையமாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-ஆம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கு நெகமம், செஞ்சேரி மற்றும் பொள்ளாச்சி விற்பனைக் கூடங்களுடன் மேலும் கூடுதலாக ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு விற்பனைக் கூடங்களை கொப்பரை கொள்முதல் நிலையமாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஏற்கனவே நெகமம், செஞ்சேரி, பொள்ளாச்சி, ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை கொப்பரை கொள்முதல் நிலையங்களாக நியமித்து ஆணையிடப்பட்டுள்ள நிலையில், தற்போது கூடுதலாக அன்னூர் மற்றும் தொண்டாமுத்தூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு கொள்முதல் நிலையங்களாக நியமித்து பின்வரும் இலக்கினை அடைவதற்கு அனுமதி வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண். | மாவட்டம் / விற்பனைக் குழு | ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் | அரவை கொப்பரை (மெ.டன்) | பந்து கொப்பரை (மெ.டன்) |
|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | செஞ்சேரி | 2500 | 100 |
| 2. | | நெகமம் | 2000 | 100 |
| 3. | | பொள்ளாச்சி | 2500 | 100 |
| 4. | | ஆனைமலை | 1000 | 25 |
| 5. | | கிணத்துக்கடவு | 1000 | 25 |
| 6. | | அன்னூர் | 500 | 25 |
| 7. | | தொண்டாமுத்தூர் | 500 | 25 |
| | மொத்தம் | | 10000 | 400 |

6. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கு நெகமம், செஞ்சேரி, பொள்ளாச்சி ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு ஒழுங்குமுறை

விற்பனைக் கூடங்களுடன் மேலும், கூடுதலாக அன்னூர் மற்றும் தொண்டாமுத்தூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை கொப்பரை கொள்முதல் நிலையங்களாக நியமித்து ஆணை வெளியிடப்படுகிறது.

7. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 5 மற்றும் 6-ல் வெளியிடப்பட்ட நிபந்தனைகளை அன்னூர் மற்றும், தொண்டாமுத்தூர் கொள்முதல் நிலையங்களுக்கும் பின்பற்றுமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி.சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
தலைமை பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை-32.
முதன்மை அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை-9.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
தேசிய வேளாண்மை விற்பனை கூட்டமைப்பு, சென்னை-84.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை - 9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை–9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.16569/தோ.க.2/2022.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

04/08/2022
பிரிவு அலுவலர்